**அசல் வழக்கு எண்: 359/2022**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 27th day of January 2026
வா.சா.1. தஞ்சி, த/பெ. சின்னசாமி.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முன்னால் இராணுவத்தில் வேலை பார்த்தேன். தற்போது விவசாயம் செய்து வருகிறேன். நான் 2024ம் வருடம் ஜீன் மாதம் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றேன். நான் 2018ம் வருடம் ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் விடுமுறையில் இருந்தேன். அதன்பின்னர் சாதாரண விடுப்பில் 2018ம் வருட இறுதியில் வந்தேன். 2018ம் வருடம் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஜம்மு காஷ்மீரில் பணியில் இருந்தேன். அந்த இரண்டு மாதங்களில் நான் எவ்வித விடுப்பும் எடுத்து எனது ஊருக்கு வரவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். எனக்கு பிரதிவாதி பார்த்திபனை நண்பர் தஞ்சியப்பன் என்பவர் மூலம் தெரியும். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்திற் முன்னர் வேறு ஏதேனும் ஒப்பந்தம் போடப்பட்டதா என்றால் ஏற்கனவே பிரதிவாதியுடன் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் சொத்து மொத்தம் 38 செண்ட் ஆகும். அதில் 30 செண்டை முன்னர் கிரைய ஒப்பந்தம் போட்டோம். அந்த ஒப்பந்தத்தில் நான் ரூ.2,00,000/- கிரைய முன் தொகை கொடுத்து ஜனவரி 2017ல் கிரைய செய்து கொள்வதாக குறிப்பிட்டிருந்தோம். அந்த தேதிக்குள் கிரையம் பல்வேறு காரணங்களால் ஏற்படுத்த முடியாததால் மீண்டும் ஒரு கிரைய ஒப்பந்தம் அக்டோபர் 2017ம் வருடம் போட்டோம். அந்த இரு ஒப்பந்தம் போட்ட பின்னர் அன்றைய தேதியிலேயே நான் 10 லட்சம் ரூபாய் கொடுத்திருந்ததால் பிரதிவாதி எனக்கு 25 செண்ட் கிரையம் செய்து கொடுத்தார். அதன் பின்னர் தாவா கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது. கிரைய ஒப்பந்தம் ரத்து பத்திரம் ஏதேனும் இதற்கு முன்னர் போடப்பட்டதா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் உள்ள சரத்துகள் எனக்கு தெரியும். அந்த சரத்தில் 09.04.2018க்குள் நான் பாக்கி தொகை கொடுத்து கிரையம் செய்து கொள்ளாவிட்டால் கிரைய அட்வான்ஸ் தொகையை இழந்துவிட வேண்டியது என கண்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 அறிவிப்பானது நான் எனது மனைவியிடம் கூறியதன் பேரில் அவர் வழக்கறிஞரை சந்தித்து விவரம் தெரிவித்து அனுப்பப்பட்டதாகும். வா.சா.ஆ.2 அனுப்பப்பட்ட தேதி 11.04.2018 காலை 11.54 மணி ஆகும். இந்த அறிவிப்பு அனுப்பியதற்கு முன்னர் எனக்கோ எனது மனைவிக்கோ

ஏதேனும் அறிவிப்பு வந்ததா என்றால் நான் பணியில் இருந்ததால் எனக்கு தெரியாது. எனது தம்பி பார்த்திபனுக்கு ஏதேனும் அறிவிப்பு வந்ததா என்றால் அது எனக்கு தெரியாது. நான் எனது மனைவி மூலம் வழக்கறிஞருக்கு விவரம் தெரிவித்தது சம்மந்தமாக எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ வழக்கிலோ சொல்லியுள்ளேனா என்றால் நான் சொல்லி அனுப்பியதாக தான் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கனவே போடப்பட்ட இரு கிரைய ஒப்பந்தங்கள் குறித்தும் நான் பிரதிவாதியிடம் கிரையம் பெற்ற விவரம் குறித்தோ எனது அறிவிப்பிலோ வழக்கிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த சொத்து விவரத்தில் கிணற்றில் அமைந்துள்ள மின் இணைப்பு, மின் மோட்டார் இவைகள் நீங்களாக என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பில் சொத்து விவரத்தில் கிணற்றில் அமைந்துள்ள மின் இணைப்பு, மின் மோட்டார் இவைகள் உட்பட என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதற்காக அவ்வாறு முன்னுக்கு பின் முரணாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் கிணற்றில் அமைந்துள்ள மின் இணைப்பு, மின் மோட்டார் இவைகள் தவிர என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பிரதிவாதியை மிரட்டி சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மேற்கண்டவாறு முன்னுக்கு பின் முரணான விவரத்தை தெரிவித்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதி எனது மனைவிக்கும் எனது தம்பிக்கும் 09.04.2018ம் தேதி ஒரு அறிவிப்பு அனுப்பினார் என்றும் அதை பெற்றுக்கொண்ட பின்னர் தான் நான் வா.சா.ஆ.2 அறிவிப்பை 09.04.2018ம் தேதியிட்டு 11.04.2018ம் தேதி அனுப்பினேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ஆவணமானது பிரதிவாதி 09.04.2018ம் தேதியிட்டு எனது மனைவிக்கும் எனக்கும் எனது தம்பி பார்த்திபனுக்கும் அனுப்பியது என்றால் சரிதான். மேற்கண்ட அறிவிப்பை நானே வழக்கில் தாக்கல் செய்துவிட்டு அது குறித்து தற்போது தெரியாது என சொல்கிறேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிரதிவாதி 20.04.2018ம் தேதி எனக்கு பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் 20.04.2018ம் தேதியிட்ட பதில் அறிவிப்பு பிரதிவாதி எனக்கு அனுப்பியது என்றால்

சரிதான். அந்த அறிவிப்பு அலுவலக நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.1 பதில் அறிவிப்பு வந்த பின்பு தான் நான் வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. அதற்கு முன்னரே தாக்கல் செய்துவிட்டேன். உண்மையில் நான் பதில் அறிவிப்பை பெற்றுக்கொண்ட பின்னர் தான் 27.11.2018 ம் தேதி இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அந்த பதில் அறிவிப்பில் பிரதிவாதி நான் கொடுத்த கிரைய அட்வான்ஸ் தொகையை திரும்ப பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 பதில் அறிவிப்பை மறுத்து நான் மறு அறிவிப்பு ஏதேனும் கொடுத்தேனா என்றால் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் பதில் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும் வழக்கிலும் முன்னுக்கு பின் முரணான விஷயங்களை சொல்லியுள்ளதால் எனது வழக்கு ஏற்றுக்கொள்ள தக்கல் அல்ல என்றால் சரியல்ல. நான் ஊரில் இல்லாத நிலையில் பிரதிவாதியை நேரில் சந்தித்து கிரையம் செய்து கொடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்த சரத்துப்படி நான் தாவா சொத்தை உரிய காலத்திற்குள் கிரையம் செய்துக்கொள்ள முன்வராத காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |